மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.292/2014

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரொசாரியோ | தொழில் | |
| தகப்பனார் பெயர் | அருள்சாமி | வகுப்பு | |
| வயது | 63 | சமயம் | இந்து |
| நாள் | 01.11.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.4 | | |

இன்று 01.11.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :-**

11) நான் வழக்கின் பிரதிவாதிகளுக்கு எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை விற்பனை செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி கலாவிற்கு எவ்வளவு செண்ட் நிலத்தை விற்பனை செய்தேன் என்றால், நாட்களாகிவிட்டதால் தற்போது சரியாக எனக்கு நினைவில்லை.

12) தற்போது என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழின் கணிணி பதிவிறக்க நகல் கலாவிற்கு நான் என் நிலத்தை விற்பனை செய்தது தொடர்பானது என்றால், சரிதான். மேற்படி ஆவணம் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் எத்தனை செண்டுகள் விற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 1245-3/4 சதுரடிகள் விற்பனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சகாயராஜ் வகையறா நிலத்திற்கு மேற்கு, வடக்கு, தெற்கு, கிழக்கு என கண்டுள்ளது.

13) நான், 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த நிலத்திற்கும், வாதியின் நிலத்திற்கும் சம்பந்தம் இல்லை. 1ம் பிரதிவாதி மாரியப்பனுக்கு நான் என் நிலத்தை விற்றுள்ளேன் என்றால், சரிதான். எந்த தேதியில் விற்றேன் என்றால், சரியாக நினைவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழின் கணிணி பதிவிறக்க நகல் நான் என் நிலத்தை மாரியப்பனுக்கு விற்பனை செய்தது தொடர்பானது என்றால், சரிதான். மேற்படி ஆவணம் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.7ல் எத்தனை சதுரடிகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், 2953-1/2 சதுரடிகள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

14) மேற்படி மாரியப்பனுக்கு விற்ற நிலத்திற்கான செக்குபந்தி விவரங்கள் பஞ்சாயத்து ரோட்டிற்கும் கிழக்கு, சகாயராஜ் வகையறா நிலத்திற்கும் வடக்கு, தெற்கு, கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சக்குபந்தியில் கண்டுள்ள 2953–1/2 சதுரடிகள் நிலத்தைதான் நான் மாரியப்பனுக்கு விற்பனை செய்துள்ளேன்.

15) மேற்படி 2953–1/2 சதுரடிகள் நிலத்திற்கும், வாதிகளுக்கு என் தந்தை விற்பனை செய்த பூமிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், சரிதான். நான் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த பூமிக்கும், வாதிகளின் பூமிக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால், சுமார் 100 அடி துாரம் இருக்கலாம், சரியாக என்னால் இடைவெளி குறிப்பிட்டு சொல்ல இயலாது.

(1, 2 ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.4 ன்குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.